[2008 மே 13

252—

நீதிமன்றங்கள்

*12191—**திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரத்தில் ஒரு குற்றவியல் நடுவர் மன்றம் அமைக்க 18-2-2008-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த நடுவர் மன்றத்தினுடைய தொடர், தொடரா செலவுக்காக 6.8 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்த நீதிமன்றத்தை நானே சென்று துவக்கி வைத்துவிட்டு வந்துள்ளேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு, ஒட்டன்சத்திரத்தில் இந்த நீதிமன்றத்தைத் திறப்பதற்கு அனுமதி வழங்கினார்கள். அதற்காக மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கெனவே திறந்து வைத்திருக்கின்றார்கள். அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு வருங்காலத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

2008 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களைத் தொடங்குகின்றபோது அதற்கு infrastructure செலவுகளை ஒதுக்குகின்றபோது, தொடராச் செலவு மற்றும் தொடரும் செலவு என்ற வகையில் ஒதுக்கப்படுகின்றது. அதுமாதிரி இது தொடர்கின்ற கோரிக்கை. நீதிமன்றம் கொடுத்தவுடனே, அடுத்து கட்டடத்தைக் கேட்டிருக்கின்றார்கள். அடுத்த ஆண்டு நிதி நிலைமைக்கேற்ப அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 200 ஏக்கர் நிலம் காண்பிக்கப்பட்டது. ஆனால், நீதிமன்ற நீதிபதிகள் அந்த இடத்திலே அமைக்க முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே கோர்ட் அமைந்திருக்கின்ற இடத்திலேயே கட்டடம் கட்டுவதற்கு இடம் ஏதுவாக இருக்கின்றது. விரைவிலே அங்கே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் புதிய நீதிமன்றம் அமைவது என்பது பற்றியும், எந்த இடத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்ட வேண்டுமென்பது பற்றியும் உயர் நீதிமன்றம்தான் முடிவு செய்யவேண்டும். அரசு அதிலே தலையிட்டு அங்கே செய்யவேண்டும், இங்கே செய்யவேண்டும் என்று நாம் சொல்ல முடியாது. எனவே, உயர் நீதிமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் முறையிட்டால், இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொன்னால், மீண்டும் அவர்கள் பரிசீலிக்க வாய்ப்புண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு செங்கல்பட்டு நகரிலே மஹிலா நீதிமன்றம் தொடங்க

மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆணையிட்டார்கள். அது கடந்த மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்திலே பல்வேறு இடங்களில் நீதிமன்றங்கள் தொடங்கும்போது அந்தப் பகுதிகளில் இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதில்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கின்றது. எனவே, இதையெல்லாம் சரிசெய்து வருகின்ற காலங்களில் மக்கள் பிரதிநிதிகளையும் அழைக்கவேண்டுமென்ற ஓர் அறிவிப்பை மாண்புமிகு அமைச்சரவர்கள் வெளியிடுவார்களா என்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், என்னுடைய தொகுதியில் திருக்கழுக்குன்றத்தில் குற்றவியல் நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. புதியதாக நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை நீதிமன்ற விழாக்களுக்கு அழைக்கவேண்டுமென்பது குறித்து நான் இந்த அவையிலே மூன்று, நான்கு முறை சொல்லிவிட்டேன். மற்ற விழாக்களிலும் இதுபற்றிப் பேசியிருக்கின்றேன். நீதிபதிகளிடமும் தெரிவித்திருக்கின்றேன். இதற்கு முன்பு இருந்த தலைமை நீதிபதி அவர்கள், அழைக்கக் கூடாது என்று ஒரு ஆணையைப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். எனவே புதிதாக வருகின்ற தலைமை நீதிபதியிடம், இது பரிசீலிக்கப்படலாம் என்று கூறி அரசு அணுகும்.

அவர் குறிப்பிட்டதைப்போல, கட்டடங்கள் கட்டுவது என்பது, திருக்கழுக்குன்றம் மட்டுமல்ல, எல்லா இடத்திற்கும் ஆண்டொன்றுக்கு 20, 25 இடங்களில் நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். சென்ற ஆண்டு மட்டும் 300 கோடி ரூபாயை தலைவர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். அதில் 130 கோடி ரூபாயில் கட்டடங்கள் மட்டுமே கட்டியிருக்கின்றோம். 100 கோடி ரூபாய்க்கு கிட்டத்தட்ட 30, 40 குடியிருப்புகளைக் கட்டியிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபற்றி அடுத்த ஆண்டு நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.